# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 - 2025

## மானியக் கோரிக்கை எண். 26


**தா.மோ. அன்பரசன்**

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2024

## பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| | முன்னுரை | 1–3 |
| 1 | நிறுவன அமைப்பு | 3–4 |
| 2 | அணுகுமுறைகள் | 4–6 |
| 3 | 1970 முதல் 2024 வரையிலான செயல்பாடுகள் | 7–9 |
| 4 | நிலையான மேம்பாட்டிற்கான இலக்கு | 9 |
| 5 | தற்போது நடைபெற்று வரும் பெரும் திட்டங்கள் | 10–23 |
| 6 | பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 23–28 |
| 7 | மாநில நிதியுதவி திட்டம் | 28–37 |
| 8 | சென்னை மாநகரின் நீர்வழிகளை மறுசீரமைத்தல் – ஆற்றோரங்களில் வாழும் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் | 37–39 |
| 9 | மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் விற்பனைப் பத்திரங்கள் | 39–40 |
| 10 | சமுதாய மேம்பாட்டுப் பணிகள் | 40–44 |
| | முடிவுரை | 44 |

## மானியக் கோரிக்கை எண்.26

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

### தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

### கொள்கை விளக்கக் குறிப்பு – 2024 – 2025

## முன்னுரை

துரித நகர்ப்புற வளர்ச்சி நாட்டின் முன்னேற்றத்திற்கான அளவு கோலாகும். இருப்பினும் நகர்ப்புற வளர்ச்சி பல சவால்களை ஏற்படுத்துகின்றது. பெருநகரங்களின் வளர்ச்சி பல்வேறு வேலை வாய்ப்புகளையும் மற்றும் வாழ்வாதாரங்களையும் வழங்குகின்றது. இந்நிகழ்வின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் நகர்ப்புற ஏழை மக்களாவர். குடிசைப் பகுதிகளின் பெருக்கம் துரித நகரமயமாதலுடன் ஏற்படுகின்றது. மேலும், சமூக மற்றும் கொள்கை அளவிலான சவால்களையும் உருவாக்குகின்றது.

பொதுவாக நகர குடிசைப்பகுதிகளில் வாழ்வதற்கு தேவையான, பாதுகாப்பான குடிநீர், மின்சாரம், திடக்கழிவு அகற்றுதல் போன்ற அடிப்படை வசதிகள் குறைவாக அல்லது போதிய வசதிகள் இல்லாத சூழ்நிலை நிலவுகின்றது. நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வறுமை மற்றும் வேலையின்மை ஆகியவை உள்ளன.

நகரக் குடிசைப் பகுதிகளின் ஏழ்மையான வாழ்க்கை நிலையினை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் மேம்படுத்தவும், அவர்களுக்கு திறனுக்கேற்ற வீட்டு வசதியினை அளிக்கவும், அவர்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த வேண்டும் எனும் சீரிய நோக்கத்தில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.



நகரக் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தி அவற்றினை வாழ்வதற்கு தகுதி வாய்ந்த இடங்களாக மேம்படுத்தும் முதன்மையான குறிக்கோளுடன், "தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்" பெயர் 01. 09. 2021 முதல் **"தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்"** என மாண்புமிகு முதலமைச்சரால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**2024-2025 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு**

**ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)**

| வ. எண் | துறைகள் | | வருவாய் | மூல தனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்** | அனுமதித்தது | 2,432,54,35 | 4 | 1 | 2,432,54,40 |

## 1. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி (மேம்பாடு மற்றும்

அகற்றுதல்) சட்டம் 1971–ன் கீழ், தலைவர், மேலாண்மை இயக்குநர், இணை மேலாண்மை இயக்குநரால் வழி நடத்தப்படுகிறது.

**2. அணுகுமுறைகள்**

குடிசைப்பகுதிகளற்ற தமிழ்நாடு எனும் தொலைநோக்குடன் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் கீழே கூறப்பட்டுள்ள அணுகுமுறைகளை பின்பற்றி, நகர குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீட்டுவசதி கட்டமைப்பு பணிகள் மற்றும் இதர சேவைகளை வழங்க பல்வேறு அடுக்குமாடி குடியிருப்புகள், தனி வீடுகள் மற்றும் இதர மேம்பாட்டுப் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகின்றது.

i) ஆட்சேபணையில்லாத அரசு நிலங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் அதிகபட்ச தரைப் பரப்பளவு குறியீட்டினை (Maximum FSI) அடிப்படையாகக் கொண்டு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, அப்பகுதியில்



முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

ii) ஆட்சேபகரமான அரசு நிலங்களான நதிக்கரைகள், சாலையோரங்கள் போன்ற இடங்களில் வாழும் குடும்பங்களுக்கு மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அடிப்படை மற்றும் சமூக வசதிகளுடன் ஒருங்கிணைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புப் பகுதிகளாக கட்டப்படுகின்றன.

iii) கழிவறையின்றி ஓலைக் குடிசை அல்லது ஓட்டுக் கூரை வேயப்பட்ட தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் நகர குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு, கான்கிரீட் தளத்துடன் கூடிய நிலையான வீடுகளை அவர்களே கட்டிக் கொள்ள மானியம் வழங்கப்படுகிறது.

iv) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் முன்பு கட்டப்பட்டு தற்போது சிதலமடைந்த பழைய அடுக்குமாடிக்

குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்குடியிருப்புகள் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

v) அடுக்குமாடிக் குடியிருப்புகள் உறுதியான கட்டமைப்போடு நீண்டகாலம் நிலைத்திருப்பதை உறுதி செய்ய வெள்ளை அடித்தல், வர்ணம் பூசுதல், பழுதுபார்ப்பு மற்றும் புனரமைத்தல் பணிகள் குறிப்பிட்ட காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

vi) வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்த திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு அளிக்கப்படுகின்றன.



## 3. 1970 முதல் 2024 வரையிலான செயல்பாடுகள்

சென்னை மற்றும் இதர நகரங்களில் மறுகட்டுமானம் செய்யப்பட்ட குடியிருப்புகள் உட்பட 1,93,891 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பராமரிக்கப்படுகின்றன. அதன் விவரம் பின் வருமாறு.

| வ. எண். | மாவட்டம் | திட்டப் பகுதிகள் | குடியிருப்புகள் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 206 | 117016 |
| 2 | திருவள்ளூர் | 1 | 1024 |
| 3 | செங்கல்பட்டு | 7 | 2802 |
| 4 | காஞ்சிபுரம் | 2 | 4160 |
| 5 | வேலூர் | 6 | 1568 |
| 6 | திருப்பத்தூர் | 1 | 528 |
| 7 | திருவண்ணாமலை | 2 | 336 |
| 8 | கடலூர் | 4 | 840 |
| 9 | கள்ளக்குறிச்சி | 1 | 264 |
| 10 | திருச்சி | 15 | 4774 |
| 11 | அரியலூர் | 2 | 864 |
| 12 | பெரம்பலூர் | 1 | 504 |
| 13 | தஞ்சாவூர் | 10 | 2560 |
| 14 | புதுக்கோட்டை | 13 | 4140 |
| 15 | நாகப்பட்டினம் | 2 | 440 |
| 16 | திருவாரூர் | 1 | 80 |
| 17 | சேலம் | 14 | 3044 |
| 18 | தர்மபுரி | 6 | 1488 |
| 19 | கிருஷ்ணகிரி | 3 | 1224 |
| 20 | நாமக்கல் | 8 | 2517 |

| வ. எண். | மாவட்டம் | திட்டப் பகுதிகள் | குடியிருப்புகள் |
|---|---|---|---|
| 21 | கரூர் | 4 | 624 |
| 22 | கோயம்புத்தூர் | 45 | 16283 |
| 23 | நீலகிரி | 1 | 172 |
| 24 | திருப்பூர் | 11 | 5004 |
| 25 | ஈரோடு | 16 | 4096 |
| 26 | மதுரை | 21 | 7962 |
| 27 | விருதுநகர் | 1 | 176 |
| 28 | தேனி | 8 | 2348 |
| 29 | சிவகங்கை | 1 | 608 |
| 30 | திண்டுக்கல் | 1 | 200 |
| 31 | இராமநாதபுரம் | 4 | 856 |
| 32 | திருநெல்வேலி | 9 | 2903 |
| 33 | தூத்துக்குடி | 7 | 1406 |
| 34 | கன்னியாகுமரி | 5 | 1080 |
| **மொத்தம்** | | **439** | **193891** |

மேற்கூறப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு திட்டம், தாமாக வீடு கட்டும் திட்டம் போன்ற திட்டங்கள் வாயிலாக மொத்தம் 5,41,500 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

சென்னை மாநகரில் 1,17,016 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், இதர நகரங்களில் 76,875 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் ஆக மொத்தம் 1,93,891 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு



நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களின் கீழ் 1,34,678 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## 4. நிலையான மேம்பாட்டிற்கான இலக்கு

ஐக்கிய நாடுகளின் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையான மேம்பாட்டு இலக்கு–11ன் கீழ் 2030 ஆம் ஆண்டிற்குள் போதுமான, பாதுகாப்பான மற்றும் திறனுக்கேற்ற வீட்டு வசதி மற்றும் அடிப்படை வசதிகளை அனைவரும் பெறுவதை உறுதி செய்தல், நகர்ப்புற குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல் போன்ற இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இதனை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளது.

## 5. தற்போது நடைபெற்று வரும் பெரும் திட்டங்கள்

தமிழகத்தின் நகரங்களில் வாழும் அனைத்து ஏழைக் குடும்பங்களுக்கும் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் திறனுக்கேற்ற வீட்டு வசதி வழங்கி அவர்களுடைய வாழ்க்கை நிலையினை உயர்த்தும் நோக்கத்தினை அடைய கீழே கூறப்பட்டுள்ள பெரும் திட்டங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 5.1. பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் (நகர்ப்புறம்) – அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டம்

தமிழ்நாட்டின் நகரப் பகுதிகளில் அனைவருக்கும் வீட்டு வசதி (Housing for All) திட்டப் பணிகளை நிறைவேற்ற தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மாநில அளவிலான முகமை நிறுவனமாக அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒன்றிய, மாநில அரசுகள் அளிக்கும் மானியம் மற்றும் பயனாளிகள்



பங்களிப்புத் தொகை ஆகியவற்றினைக் கொண்டு அடிப்படை கட்டமைப்புகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் பயனாளிகள் தாமாக வீடு கட்டும் வகைப்பாட்டின் கீழ் தனிவீடுகள் கட்டப்படுகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 2021–2024 வரையிலான மூன்றாண்டுகளில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 29,439 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 1,70,462 தனி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும், 79,094 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 89,429 தனி வீடுகளுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக ரூ.6685.08 கோடி செலவிடப் பட்டுள்ளது.

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் மேற்கூறப்பட்ட இரண்டு வீட்டு வசதி திட்டப்பணிகளான பங்களிப்புடன் திறனுக்கேற்ற

வீட்டு வசதி (அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்) மற்றும் பயனாளிகள் தாமாக தனி வீடுகள் கட்டுதல் போன்ற திட்டப்பணிகளை செயல்படுத்த 2024–25 ஆண்டில் ரூ.2100.00 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அனைவருக்கும் வீட்டுவசதி (நகர்ப்புறம்) – நிதி பங்கீட்டுமுறை

| வ. எண். | விவரம் | பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி – அடுக்குமாடிக் குடியிருப்புகள் (ஒரு குடியிருப்பிற்கான தொகை ரூ.இலட்சத்தில்) | பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் (தனி வீடுகள் ) (ஒரு வீட்டிற்கான தொகை ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | ஒன்றிய அரசின் மானியம் | 1.50 | 1.50 |
| 2 | மாநில அரசின் மானியம் | 7.50 – 13.00 | 0.60 |
| 3 | பயனாளிகள் பங்களிப்புத் தொகை | 1.00 – 6.00 | 0.90 |
| ஒரு குடியிருப்பிற்கான செலவினம் | | 10.00 – 17.00 | 3.00 |

**செயலாக்க நிலை**

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் ஒரு பகுதியாக 1,43,696 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் பயனாளிகள் வீடு கட்டும் மானிய திட்டத்தின்



கீழ் 4,10,574 தனி வீடுகள் ஆக மொத்தம் 5,54,270 வீடுகள் ரூ.29,752.36 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் 57,107 அடுக்குமாடி குடியிருப்புகளும் மற்றும் பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 3,10,712 தனி வீடுகளும் 2015–2024 ஆம் ஆண்டில் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 79,094 அடுக்குமாடி குடியிருப்புகளும் மற்றும் பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 89,429 தனி வீடுகளும் ஆக மொத்தம் 1,68,523 வீடுகளுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன. மேலும், 19,584 வீடுகளுக்கான பணிகள் துவங்கப்படவுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக இதுவரை ரூ.17,467.34 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 5.1.1 பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டம்– தனி வீடுகள் கட்டுதல்

நகரங்களில், சுகாதாரமற்ற நிலையில் கழிப்பிட வசதியின்றி ஓலைக்குடிசை அல்லது ஓட்டுக் கூரை வேயப்பட்ட தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் நில உரிமை கொண்ட ஏழைக் குடும்பங்களால் தங்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொள்ள இயலவில்லை. இக்குடும்பங்களுக்கு கான்கிரீட் கூரையுடன் நிலையான வீடுகளைத் தாமாகக் கட்டிக் கொள்வதற்கு ஏதுவாக மானியம் வழங்கப்படுகின்றது.

**தற்போதைய நிலை**

பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், ரூ.12,619.21 கோடி திட்ட மதிப்பீட்டில், 4,10,574 தனி வீடுகள் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் 3,10,712 தனி வீடுகளுக்கான பணிகள் முடிவுற்றுள்ளன. 89,429 வீடுகளுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் 2025 ஆம்



ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிவுறும். 10,433 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக ரூ.7,261.75 கோடி மானியமாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 5.1.2 பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டுவசதி – அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

நகர்ப்புறப் பகுதிகளில் ஆட்சேபணையற்ற, நெருக்கமான குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கும் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினைச் சார்ந்த குடும்பங்களுக்கும் அதே இடங்களிலும் அல்லது மாற்றிடங்களிலும் புதியதாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இக்குடியிருப்புகளில் குடிநீர் விநியோகம், கழிவு நீரகற்றுதல், சாலைகள், தெரு மின்விளக்குகள், மழைநீர் வடிகால் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன. மறுகுடியமர்வு திட்டப்பகுதிகளில் சமூக கட்டமைப்பு வசதிகளும் அமைக்கப்படுகின்றன.

**இத்திட்டத்தின் தற்போதைய நிலை**

இத்திட்டத்தின் கீழ், ரூ.17,133.15 கோடி திட்ட மதிப்பீட்டில் 1,43,696 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் 2015 ஆம் ஆண்டு முதல் 2024 வரை 57,107 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகள் முடிவுற்றுள்ளன. 79,094 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ள 79,094 அடுக்குமாடி குடியிருப்புகளை 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 9,151 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகள் 2024–25 ஆம் ஆண்டில் தொடங்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக இதுவரை ரூ.10,205.59 கோடி 2024 ஆம் ஆண்டு மார்ச் வரை செலவிடப்பட்டுள்ளது.



பயனாளிகளுக்கு ஏற்படும் நிதிச் சுமையினை குறைக்க, அதிகபட்ச தரைப் பரப்பளவு குறியீடு எட்டப்படும் வகையில் குடியிருப்புகள் கட்டப்படும். மறுகட்டுமான திட்டப்பகுதிகளில் பயனாளிகள் பங்களிப்பு தொகையினை ஒரே தவணையில் செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் நிர்வகிக்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் உறைவிடநிதி ஆகியவற்றிலிருந்தும் திட்டச்செலவின் ஒரு பகுதியினை பெற்று நிறைவேற்ற ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**5.1.3 சிதலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம்**

சென்னை மற்றும் இதர நகரங்களில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் முன்னர் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் சில நீண்டகால பயன்பாடு மற்றும் தட்பவெப்ப நிலை காரணமாக சிதலமடைந்து இக்குடியிருப்புகளில்

வாழும் குடும்பங்களின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் ஆபத்தினை ஏற்படுத்துகின்றன. அரசால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு இத்திட்டப்பகுதிகளை ஆய்வு செய்து குடியிருப்புகளின் உறுதித்தன்மையின் அடிப்படையில் மறுகட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக சிதலமடைந்த குடியிருப்புகளை இடிக்க பரிந்துரைக்கின்றது. மறுகட்டுமானத்திற்கு பின் இக்குடியிருப்புகள், புதுமையான, மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் மற்றும் வசதியான வடிவமைப்புகள் கொண்டவையாக இருக்கும். அனுமதிக்கப்பட்ட தரைப் பரப்பளவு குறியீட்டினைத் திறமையாகப் பயன்படுத்தி, மேம்படுத்தப்பட்ட பொது வசதிகளுடன் கூடுதல் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

மறுகட்டுமானம் செய்யப்படும் புதிய குடியிருப்புகள், பழைய குடியிருப்புகளில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.



கூடுதலாக கட்டப்பட்ட குடியிருப்புகள் இதே திட்டப்பகுதிகளின் அருகில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான திட்டத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### 5.1.4 பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மறுகட்டுமான திட்டப்பணிகள்

2008 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை, 28,995 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் இதுவரை 14,718 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன மற்றும் 14,277 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அடுத்து வரும் ஆண்டுகளில் பல்வேறு வீட்டு வசதி திட்டங்களின் கீழ் கூடுதலாக 28,643 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 5.1.5 திறப்பு விழா நடத்தப்பட்ட திட்டப் பகுதிகள்

2021–2024 வரையிலான ஆண்டுகளில், 96 அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் ரூ.3248.74 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட 29,439 அடுக்குமாடிக் குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | ஆண்டு | திட்டங்களின் எண்ணிக்கை | அடுக்குமாடி குடியிருப்புகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|---|
| 1 | 2021-22 | 3 | 1,576 | 154.47 |
| 2 | 2022-23 | 32 | 9,339 | 942.11 |
| 3 | 2023-24 | 61 | 18,524 | 2152.16 |
| மொத்தம் | | 96 | 29,439 | 3248.74 |

### 5.1.6 இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் திறனுக்கேற்ற வாடகை வீட்டு வசதி வளாகங்கள்

உள்நாட்டு நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் உற்பத்தி



தொழிற்சாலைகளில் பணிபுரியும் இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோரின் வாழ்க்கையினை எளிதாக்க இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்காக திறனுக்கேற்ற வாடகை வீட்டு வசதி வளாகங்கள் அமைக்கும் திட்டம், ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கு நவீன தொழில் நுட்ப மானியம் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது.

இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வாடகை வீட்டு வசதி வளாகங்கள் அமைக்கும் திட்டப்பணிகளை செயல்படுத்த ஒருங்கிணைப்பு நிறுவனமாக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி வளாக திட்டங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் தங்கும் இடங்கள், குடியிருப்புகள், கட்டும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அவர்கள்

பணிபுரியும் இடங்களுக்கு அருகில் வீட்டுவசதி அளித்து அவர்கள் வாழ்வினை எளிதாக்க, இவ்வளாகங்களை பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் அவர்களது சொந்த நிலத்தில் கட்டமைத்து, இயக்கி, பராமரிக்க அனுமதிக்கப்படுகின்றது.

முதற்கட்டமாக, கீழே கூறப்பட்டுள்ள நகரங்களில், மாற்றுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி திறனுக்கேற்ற வாடகை வீட்டு வசதி வளாகங்கள் கட்டும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | மாநகரம் / நகரம் | நிறுவனம் | புதுமை தொழில் நுட்பங்களுக் கான மானியம் (ரூ.கோடி) | தங்கும் இடங்கள் / குடியிருப் புகள் |
|---|---|---|---|---|
| அ) முன்னேற்றத்தில் உள்ளவை | | | | |
| 1 | சென்னை | தமிழ்நாடு மாநில தொழில்கள் ஊக்குவிப்பு கழகம் (SIPCOT) | 37.44 | 18720 |
| 2 | ஸ்ரீபெரும்புதூர் | SPR கட்டுமானம் தனியார் நிறுவனம் | 7.95 | 3969 |



| வ. எண். | மாநகரம் / நகரம் | நிறுவனம் | புதுமை தொழில் நுட்பங்களுக் கான மானியம் (ரூ.கோடி) | தங்கும் இடங்கள் / குடியிருப் புகள் |
|---|---|---|---|---|
| 3 | ஒசூர் | TATA மின்னணு சக்தி நிறுவனம் | 28.62 | 13500 |
| 4 | ஸ்ரீபெரும்புதூர் | SPR நகரம் எஸ்டேட் தனியார் நிறுவனம் | 36.22 | 18112 |
| ஆ) தொடங்கப்பட உள்ளவை | | | | |
| 5 | சென்னை | சென்னை பெட்ரோலியம் நிறுவனம் | 2.88 | 1040 |
| 6 | சென்னை | SPR கட்டுமானம் நிறுவனம் | 10.13 | 5045 |
| | | மொத்தம் | 123.24 | 60386 |

## 6. பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

வீட்டுவசதித் துறையினை மேம்படுத்த உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற பன்முகத் தன்மை கொண்ட நிதி நிறுவனங்கள் நிதியுதவி வழங்கியுள்ளன.

### 6.1 உலக வங்கியின் நிதியுதவியுடன் நகர்ப்புற ஏழைகளுக்கான தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கி நிதியின் கீழ் திறனுக்கேற்ற வீட்டுவசதி திட்டங்களில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்கப்படுத்தவும் கொள்கை சீர்திருத்தம் மூலம் நகர வீட்டுவசதித் துறையினை வலுப்படுத்தவும் தமிழ்நாடு நகர வீட்டு வசதி நிறுவனங்களை மேம்படுத்தவும் அதனை வலுப்படுத்துவும் ரூ.3038.30 கோடி (USD $ 390 million) நிதியுதவி தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மற்றும் நிதி மேலாண்மை கழகம் ஆகியவற்றிற்கு தொழில்நுட்பம் உதவி மற்றும் திறன் மேம்பாட்டிற்காக ரூ.92.75 கோடி (USD $ 13.25 million) மற்றும் தமிழ்நாடு உறைவிட நிதிக்கு பங்களிப்பாக



ரூ.245.00 கோடி (USD $ 35 million) வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூ.182.33 கோடி உலக வங்கியிடமிருந்து திரும்ப பெறப்பட்டுள்ளது.

### 6.2 தமிழ்நாட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் நகர ஏழை மக்களுக்கான வீட்டுவசதித் திட்டம்

i. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் வாயிலாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள், சுகாதார அபாயங்கள் உள்ளிட்ட இயற்கை இடர்களால் பாதிக்கப்படக்கூடிய 6,000 நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை வழங்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒருபகுதியாக 3 திட்டப்பகுதிகளில் 2,745 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.419.35 கோடி மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிகள் கீழ்கண்டவாறு முன்னேற்றத்தில் உள்ளது.

| வ. எண். | மாவட்டம் / திட்டப்பகுதி பெயர் | குடியிருப்புகள் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடி) | முன்னேற்ற நிலை | முடிவுறும் மாதம் |
|---|---|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் –வல்லம் அய்யனார் கோவில் பகுதி–II | 969 | 149.32 | கட்டுமான பணிகள் முடிவுற்று, மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது. | செப்டம்பர் 2024 |
| 2. | சிவகங்கை – கழனிவாசல் | 900 | 130.23 | | செப்டம்பர் 2024 |
| 3. | திருநெல்வேலி – ரெட்டியார்பட்டி பகுதி–II | 876 | 139.80 | கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது | டிசம்பர் 2024 |
| | **மொத்தம்** | **2745** | **419.35** | | |



மேலும், நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் பகுதியில் 520 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.81.57 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டும் பணிகள் இந்நிதி ஆண்டில் தொடங்கப்படும்.

ii. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மற்றும் நிதி மேலாண்மை கழகத்திற்கு பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் குறைந்த வருமானம் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு, தொழில்துறை வீட்டுவசதி மற்றும் பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதிகளை வழங்கவும், பணிபுரியும் பெண்களுக்கு 500 படுக்கைகள் மற்றும் தொழில்துறை தொழிலாளர்களுக்கு 5000 படுக்கைகளை உருவாக்க தமிழ்நாடு உறைவிட நிதி மூலமாக உதவி அளிக்கப்படுகிறது.

iii. நகர் ஊரமைப்பு இயக்குநரகம் வாயிலாக ஏற்கனவே உள்ள மற்றும் முன்மொழியப்பட்ட

வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைக்கும் பிராந்திய திட்டமிடலுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

தமிழ்நாட்டில் சென்னை மற்றும் இதர நகர பகுதிகளில் வாழ்விடங்கள் மறுமேம்பாடு, மறுகட்டுமானம், புதிய குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக 3,000 குடியிருப்புகள் இத்திட்டத்தின் ஒருபகுதியாக மேற்கொள்ள முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

### 7. மாநில நிதியுதவி திட்டம்

#### 7.1 அயோத்தி தாஸ் பண்டிதர் வாழ்விடங்கள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் இதர நகரங்களில் 32 திட்டப்பகுதிகளில் ரூ.50.00 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளான சாலைகள், ஆழ்துளை கிணறு, மழைநீர் வடிகால், அடுக்குமாடிக் குடியிருப்புகளை சுற்றி



நடைபாதை, குடிநீர் விநியோகக் குழாய்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகளை புனரமைத்தல், கடைகள், கழிவுநீர் அமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் ஒருபகுதியாக மதுரை மாவட்டம் பூங்கா நகர் திட்டப்பகுதி, கோயம்புத்தூர் மாவட்டம் பிள்ளையார்புரம் திட்டப்பகுதி, கல்லமேடு திட்டப்பகுதி, திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லி காந்தி நகர் திட்டப்பகுதி ஆகியவற்றில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும். இதன் மூலம் 12,465 குடும்பங்கள் பயன் பெறுவார்கள்.

ஆதிதிராவிட குடும்பங்கள் வாழும் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் 2024-25 ஆம் ஆண்டில் கூடுதலாக ரூ.50.00 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.2 வடசென்னை வளர்ச்சித் திட்டம்

சென்னை மாநகரத்தில் சமச்சீரான மேம்பாட்டினை உறுதி செய்ய ரூ.4,000.00 கோடி திட்ட மதிப்பீட்டில் வடசென்னை வளர்ச்சித் திட்டம் எனும் புதிய திட்டம் அடுத்த மூன்றாண்டுகளில் நிறைவேற்றப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கட்டமைப்புப் பணிகளில் உள்ள பற்றாக்குறைகள் மற்றும் மேம்பாட்டில் உள்ள இடைவெளிகள் கண்டறியப்பட்டு அதனை சரிசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக வடசென்னை குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு வீட்டு வசதி வழங்க, வாட்டர் பேசின் சாலை (Water Basin Road) திட்டப்பகுதியில் 468 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.75.00 கோடி திட்ட மதிப்பீட்டிலும், ஸ்டான்லி சாலை (Stanely Road) திட்டப்பகுதியில் 776 அடுக்குமாடிக் குடியிருப்புகள்



ரூ.126.64 கோடி திட்ட மதிப்பீட்டிலும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிதி ஆதாரத்தினைக் கொண்டு செயல்படுத்தப்படும்.

மேலும், நடப்பு நிதியாண்டில் வடசென்னையில் கீழே கூறப்பட்டுள்ள திட்டப்பகுதிகளில் உள்ள 1,336 சிதலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.215.00 கோடி திட்ட மதிப்பீட்டில், 2024–26 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மறுகட்டுமானம் செய்யப்படும்.

| வ. எண் | திட்டப்பகுதியின் பெயர் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1 | கொடுங்கையூர் | 298 | 45.00 |
| 2 | கிழக்கு கல்லறைச் சாலை | 928 | 150.00 |
| 3 | கோதண்டராமர் தெரு | 110 | 20.00 |
| | **மொத்தம்** | **1,336** | **215.00** |

**7.3 அடுக்குமாடிக் குடியிருப்புகளை புனரமைத்தல்**

சென்னை மற்றும் இதர நகரங்களில் 1,93,891 அடுக்குமாடி குடியிருப்புகளை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் பராமரித்து வருகின்றது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பொலிவடையச் செய்யும் வகையில் கீழ்க்காணும் புனரமைப்புப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

**பகுதி–I**

சென்னை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 65 திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 26,483 அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ.68.72 கோடி செலவில் புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. 30 திட்டப்பகுதிகளில் இப்பணிகள் முடிவுற்றுள்ளன. 28 திட்டப்பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.



**பகுதி–II**

இத்திட்டத்தின் இரண்டாவது பகுதியாக சென்னை மாநகரில் 14 திட்டப்பகுதிகளில் 4,756 அடுக்குமாடிக் குடியிருப்புகளை ரூ.13.85 கோடி செலவில் புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகளை 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**7.4 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகள்**

அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான புனரமைப்புப் பணிகளின் கீழ் வராத பழுதுபார்ப்பு பணிகளான, மாடிப்படிகள், பால்கனி, தரைத்தளம், கூரைத்தளங்களில் ஏற்படும் பழுதுகளை நீக்குதல், கூரைத்தளத்தில் ஓடுகள் பதித்தல், குடிநீர் விநியோகம், கழிவுநீரகற்று குழாய்கள், கழிப்பிட பீங்கான்கள் போன்றவைகளை மாற்றுதல் போன்ற பணிகள் குடியிருப்புகளை நன்முறையில் பராமரிக்கும்

நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்றன. இப்பணிகள் மாநில அரசின் நிதி மற்றும் இதர நிதியினைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 117 திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 76,434 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.59.80 கோடி செலவில் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் 109 திட்டப்பகுதிகளில் உள்ள 74,208 குடியிருப்புகளுக்கான பணிகள் ரூ.50.53 கோடி செலவில் 2022–24–ஆம் ஆண்டுகளில் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 8 திட்டப் பகுதிகளின் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**7.5 உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி**

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் நிர்வகிக்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து அடிப்படை வசதிகளுக்கான பல்வேறு பணிகள் செய்யப்பட்டுள்ளன.



பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டப்பகுதிகளில் தார் சாலைகள், கான்கிரீட் நடைபாதைகள், மழைநீர் வடிகால், தெரு மின்விளக்குகள் மற்றும் குடிநீர் விநியோக அமைப்புகள் போன்ற அடிப்படை வசதிகள் ரூ.36.11 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2021–23 வரையிலான ஆண்டுகளில் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் ரூ.783.21 கோடி திட்ட மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**7.6. உறைவிட நிதி**

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான வீட்டுவசதி பணிகளை ஊக்குவிக்க உறைவிட நிதியினை அரசு ஏற்படுத்தியுள்ளது. உறைவிட நிதியிலிருந்து அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பணிகளுக்கு 2021–ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை

ரூ.514.80 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் கட்டுமான மற்றும் கட்டமைப்பு பணிகள் முழுமை பெற செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**7.7 அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பராமரித்தல் – புதிய அணுகுமுறை – நம் குடியிருப்பு நம் பொறுப்பு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்குவதற்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகளை குடியிருப்போர் நலச் சங்கங்கள் மேற்கொள்வதற்கும் ஏதுவாக **"நம் குடியிருப்பு நம் பொறுப்பு"** என்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட பராமரிப்புக் கட்டணங்களுக்கு இணையான மானியத்தினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட



மேம்பாட்டு வாரியத்திற்கு மாநில அரசு வழங்கும். குடியிருப்போர் நல சங்கங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேற்பார்வையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு சிறிய பழுதுகள் மற்றும் வழக்கமான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

மொத்தம் 694 குடியிருப்போர் சங்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டு இதுவரை 680 குடியிருப்போர் நல சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவற்றுள் 543 குடியிருப்போர் நல சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குடியிருப்போர் நல சங்கங்கள் பதிவு செய்வதற்காக செலுத்திய கட்டணங்கள் அரசால் ஈடு செய்யப்படுகின்றன.

**8. சென்னை மாநகரின் நீர்வழிகளை மறுசீரமைத்தல் – ஆற்றோரங்களில் வாழும் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள்**

சென்னை நகர நீர்வழிகள் மறு சீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, அடையாறு மற்றும் கூவம் ஆற்றோரங்களில் வாழும் குடும்பங்கள், நீர்வளத்

துறையால் கணக்கெடுக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற துறைகளின் ஒருங்கிணைப்புடன் நீர்வளத் துறையின் கோரிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகின்றனர்.

ஆற்றோரங்களில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் மறுகுடியமர்வின் தற்போதைய நிலை பின்வருமாறு:

| வ. எண் | நதிகளின் பெயர்கள் | மறு குடியமர்வு செய்யப்பட வேண்டிய மொத்த குடும்பங்கள் | மறு குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்கள் | மறு குடியமர்வு செய்யப்பட வேண்டிய குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| 1 | கூவம் | 14,257 | 13,484 | 773 |
| 2 | அடையாறு | 9,539 | 5,051 | 4,488 |
| | **மொத்தம்** | **23,796** | **18,535** | **5,261** |

மீதமுள்ள 5,261 குடும்பங்களின் மறுகுடியமர்விற்காக அனைவருக்கும் வீட்டு வசதி / பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்படும் அடுக்குமாடிக்



குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2025 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் முடிவுறும்.

## 9. மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் விற்பனைப் பத்திரங்கள்

### 9.1 மனைகளுக்கான நில உரிமை

சென்னை மற்றும் 9 நகரங்களில் அரசு மற்றும் பிற துறைகளுக்குச் சொந்தமான நிலங்களிலுள்ள ஏழைகளின் வாழ்விடங்களில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நகர்ப்புற ஏழைகளுக்காக மனைதிட்டங்கள் "உள்ளது உள்ளபடி" நிலையில் செயல்படுத்தப்பட்டன. இப்பகுதிகள் அமைந்துள்ள நிலங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டவுடன், நகர்ப்புற ஏழைக் குடும்பங்கள் வாழ்ந்து வரும் மனைகளுக்கான நில உரிமை, கிரையப்பத்திரங்கள் வாயிலாக வழங்கப்படுகிறது.

## 9.2 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான கிரையப் பத்திரங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் வாயிலாக தற்போது 1,93,891 அடுக்குமாடி குடியிருப்புகள் பராமரிக்கப்படுகின்றன. அவற்றுள், 32,908 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகளின் ஒதுக்கீடுதாரர்கள் விற்பனைப் பத்திரங்களை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## 10. சமுதாய மேம்பாட்டுப் பணிகள்

நகர குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் கீழே கூறப்பட்டுள்ள சமுதாய மேம்பாட்டுப் பணிகளை செயல்படுத்தி வருகிறது.



## 10.1 திறன் மேம்பாட்டு பயிற்சி

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து அந்நிறுவனங்களின் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் வாயிலாக திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 2021–2024 ஆம் ஆண்டு வரை பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனம் | பயிற்சி | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு பயிற்சி கழகம் | ஆட்டோ ஓட்டுநர், இலகுரக ஓட்டுநர், தையல், அழகுக்கலை மற்றும் இதர பயிற்சிகள் | 1,100 |
| 2 | தமிழ்நாடு நகரப்புற வாழ்வாதார இயக்கம் | தையல் கலை, ஆரி கலை மற்றும் இதர பயிற்சிகள் | 730 |
| 3 | தாட்கோ | தையல் | 60 |

| வ. எண் | நிறுவனம் | பயிற்சி | பயனாளிகள் |
|---|---|---|---|
| 4 | தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் | கணினி பயிற்சி, வீட்டு உபயோக பொருட்கள் பழுது நீக்கம் பயிற்சி, சமையல் கலை, பல்வேறு பயிற்சிகள் | 5,046 |
| மொத்தம் | | | 6,936 |
| பல்வேறு பயிற்சிகள் பெறுவதற்கு கண்டறியப்பட்டுள்ள நபர்கள் | | | 4,498 |
| **ஆக மொத்தம்** | | | **11,434** |

## 10.2 இதர பணிகள்

மேலும், அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் இளைஞர் சங்கங்கள் அமைக்கப்பட்டு இளைஞர் நலம் மேம்படுத்தப்படுகிறது. இதுவரை 5,520 உறுப்பினர்கள் அடங்கிய 247 இளைஞர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 601 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.138.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் பள்ளி செல்லும் மாணவர்களின் கல்வி பயிலும் திறனை மேம்படுத்த, தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து மாலை நேரங்களில் பயிற்சி வகுப்புகள் மற்றும் கல்வி பயிலும் மையங்கள் நடத்தப்படுகின்றன.

பெரும்பாக்கம், கே.பி.பூங்கா, அத்திப்பட்டு மற்றும் தைலாவரம் அடுக்குமாடி குடியிருப்பு திட்டப் பகுதிகளில் பள்ளி கல்வி துறையுடன் இணைந்து பள்ளிக் கல்வி சேர்க்கைக்கான முகாம் நடைபெற்று வருகிறது.

விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்க, அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதிகளில் வாழும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு கபடி, சிலம்பம், பறை, கால்பந்து, கிரிக்கெட், கைப்பந்து போன்ற விளையாட்டுகளில் தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் காவல்துறை இளைஞர்கள் சங்கம் வாயிலாக பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வெவ்வேறு அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளுக்குள் விளையாட்டு போட்டிகள் நடத்தப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில், தன்னார்வ தொண்டு

நிறுவனங்களுடன் இணைந்து, குழந்தைகள் உரிமை, குழந்தைகள் பாதுகாப்பு, மகளிர் உரிமை மற்றும் பாதுகாப்பு, போதைப் பொருள் தடுப்பு, கல்வியின் முக்கியத்துவம், நல்வாழ்வு மற்றும் சுகாதாரம் போன்ற இனங்களில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்படுகிறது. இதன் மூலம் 31,432 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**முடிவுரை**

குடிசைப்பகுதிகளற்ற தமிழ்நாடு எனும் இலக்கினை அடைவதற்கு ஏதுவாக அனைத்து குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கும் 2030–ஆம் ஆண்டிற்குள் வீட்டு வசதி மற்றும் கட்டமைப்பு வசதிகள் அமைத்து, வாழ்வாதாரங்களைப் பெருக்கி, அவர்களது வாழ்வில் ஒளியேற்றி "**ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்"** எனும் கனவு நனவாக்கப்படும்.

**தா.மோ. அன்பரசன்**


அமைச்சர்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்

நிறுவனங்கள் துறை

# இணைப்பு - I

## நிறுவன அமைப்புப் படம்






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 96 திட்டப்பகுதிகளில் ரூ.3248.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 29,439 அடுக்குமாடிக் குடியிருப்புகளை திறந்து வைத்தார்கள்.







சென்னை, துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்யாணபுரம் திட்டப் பகுதியில் ரூ.44.91 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 288 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட கொளத்தூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட இராஜாதோட்டம் திட்டப்பகுதியில்,மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கட்டுமான பணியினை களஆய்வு செய்தார்கள்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.